Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# தாள சமுத்திரத்தில் காணப்படும் தாளக்கூறுகள்

9

**த.ஞா. வர்ஷிகப்ரியா,**
ஸ்ரீ ஸத்குரு ஸங்கீத வித்யாலயம்,
இசைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், மதுரை – 625002
**மின்னஞ்சல்**: tgvarshika98@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்:**

**"ஸ்ருதி மாதா லய பிதா"** என்ற இசை பழமொழியிலிருந்து தாளத்திற்கு இசையிலுள்ள சிறப்பினை அறிய முடிகிறது. தாளத்தின் மூலம் தான் இசையின் கட்டுப்பாடு ஒரே சீராக கொண்டு செல்லப்படுகிறது. தாளத்தினைப் பற்றியும், அதன் அம்சத்தையும், அதன் சிறப்பினையும் விளக்குவதற்கு பல இலக்கண நூல்கள் இருக்கின்றன. அவற்றில் பல நூல்களில் தாளத்தினைப் பற்றி ஒரு பகுதியாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. சில நூல்கள் மட்டுமே தாளத்திற்கென்றே இயற்றப்பட்டுள்ளது. தாளத்திற்கென்றே இயற்றப்பட்டுள்ள இலக்கண நூலில் தாள சமுத்திரம் என்ற நூல் குறிப்பிடத்தக்கது. தாள சமுத்திரத்தில் என்ற இலக்கண நூலில் காணப்படும் தாளம் பற்றிய செய்திகளின் தொகுப்பே இந்த ஆய்வு கட்டுரையாகும்.

**திறவுச் சொற்கள் :-** காலம், மாத்திரை, கிரியை, யதி, கணம், பரத சூடாமணி

**முன்னுரை:**

தாள இலக்கண நூல்களில் தாள சமுத்திரம் என்ற நூல் மிகவும் விரிவானதாகும். இது 16-ம் நூற்றாண்டில் **பரத சூடாமணி** என்பவரால் இயற்றப்பட்டது. இந்நூல் பரதார்ணவம், ஆதிபரதம் ஆகிய நூல்களை தழுவி தமிழில் இயற்றப்பட்டதாகும். காப்பு பாடலுடன் தொடங்கும் இந்நூலில் 3 வெண்பா தாளத்தின் சிறப்பினை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது. 3 வெண்பா மற்றும் 20 பிரிவுகளாக பிரித்து இந்நூலில் தாளத்தை பற்றியும் அதன் அம்சத்தையும் ஆசிரியர் விளக்கியுள்ளார். அவை

1. தாளம் என்ற சொல்லின் பொருள், 2. காலம் & அதன் பிரிவுகள், 3. தாள அங்கங்களின் கால அளவு, 4.தாள அங்கங்களின் குறியீடுகள், 5. அங்கங்களுக்கு அதிபதியான தேவதைகள், 6. குணம் – மாத்திரை நிற்கும் நிலைகள், 7. கிரியை – அங்குலப் பிரமாணம், 8. அஷ்டகண லக்ஷணம், 9. தாளங்களின் ஜாதி, 10. தாள ப்ரஸ்தாரம், 11. லயம், 12. யதி, 13. மார்க்கம், 14. ஏக மாத்திரை லக்ஷண விதி, 15. கிரகம், 16. கஞ்ச காம்ஸ்ய தாள லக்ஷணம், 17. மணிகட்டு விரலுக்குரிய அதிதேவதைகள் 18. ஆவாபாதிக்கிரியை, 19. 108 தாளங்களின்

வடிவமைப்பு, 20. புஷ்பபுடப்ரபந்தம். ஆகிய பிரிவுகளின் கீழ் தாளத்தைப் பற்றி தெளிவாகவும், விரிவாகவும் விளக்கியுள்ளார். மேலும் ஒவ்வொன்றிற்கும் வெண்பாக்களையும் கூறியுள்ளார். மொத்தம் இந்நூலில் 90 பாடல்கள் உள்ளன. இதைத் தவிர 108 தாளத்திற்கும் இரண்டடி செய்யுள் கொடுக்கப்பட்டுள்ளது. 108 தாளத்தின் பெயர்கள், அதன் அங்கங்கள், அக்ஷர எண்ணிக்கை ஆகியவையும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது.

**தாளம் என்ற சொல்லின் பொருள்:**

தாளம் என்ற சொல்லில் "**தா**" என்ற தகார ஸ்வரூபம் சொக்கனாரையும், "**ள**" என்ற ளகர ஸ்வரூபம் அங்கயற்கன்னியையும் குறிக்கிறது. இந்த இரண்டு ஸ்வரூபமும் இணைந்து வரவே தாளம் என்ற பெயர் பெற்றது என்கிறார் ஆசிரியர். மேலும் காலம், கிரியை (செய்கை), மானம் (அளவு) இம்மூன்றும் சேரும்பொழுது தாளம் பிறக்கிறது என்கிறார்.

**காலம் மற்றும் அதன் பிரிவுகள்:**

காலம் - இது தாளத்தின் ஒவ்வொரு எண்ணிக்கையின் கால அளவையும் நிர்ணயிக்கிறது. 108 தாமரை இதழ்களை அடுக்கி அதில் ஒர் இதழில் ஊசி இறங்கும் நேரம் கணம் என்பர்.

8 கணம் கொண்டது – 1 இலவம்

8 இலவம் கொண்டது – 1 காட்டை

8 காட்டை கொண்டது – 1 நிமிடம் இந்த நான்கும் அருவமாக உள்ளது. கண்களால் காணவும் கிரியை செய்யவும் இயலாது.

8 நிமிடம் கொண்டது – 1 துடி

2 துடி கொண்டது – 1 துரிதம்

2 துரிதம் கொண்டது – 1 லகு

2 லகு கொண்டது – 1 குரு

3 லகு கொண்டது – 1 ப்லுதம்

4 லகு கொண்டது – 1 காகபாதம் என்ற கால அளவை கொண்டுள்ளது. துடி முதல் காலம் நிர்ணயம் செய்யப்படுகிறது. கைகளினால் கிரியை செய்யவும் காணவும் இயலும்.

**தாள அங்கங்களின் கால அளவு:**

6 அங்கங்களின் கால அளவுகளாக ஆசிரியர் கூறுவது. துடி – ¼ மாத்திரை, துரிதம் – ½ மாத்திரை, லகு - 1 மாத்திரை, குரு - 2 மாத்திரை, ப்லுதம் – 3 மாத்திரை, காகபாதம் - 4 மாத்திரை அளவுகளை கொண்டுள்ளது.

**தாள அங்கங்களின் குறியீடுகள்:**

அங்கங்களின் குறியீடுகளாவன துடி (விராமம்) - *, துரிதம் - 0, லகு - I, குரு – S, ப்லுதம் – Ś, காகபாதம் – + ஆகியவை குறியீடுகளாக சொல்லப்பட்டுள்ளன. ஆயினும் ஏடுகளில் ¼ மாத்திரை - U, ½ மாத்திரை - 0, 1 மாத்திரை - I, 2 மாத்திரை – ட, 3 மாத்திரை - உ , 4 மாத்திரை – + என்று உபயோகிக்கிறார்கள்.

**நிறங்கள்:**

அங்கங்களின் நிறங்களாவன துடி – பச்சை, துரிதம் - நீலம், லகு - வெள்ளை, குரு – சிகப்பு, ப்லுதம் – பொன், காகபாதம் – கருப்பு.

**அங்கங்களுக்கு அதிபதியான தேவதைகள்:**

ஒவ்வொரு அங்கத்திற்கும் அதிபதியாக ஒரு தேவதைகளை குறிப்பிட்டுள்ளார். துடி (விராமம்) – வருணன், துரிதம் - சிவன், லகு - சக்தி, குரு – சந்திரன், ப்லுதம் – திரிமூர்த்திகள், காகபாதம் – ஆகாசம்.

**குணம் – மாத்திரை நிற்கும் நிலைகள்:**

6 அங்கங்களும் நிற்கும் குணங்களைப்பற்றி கூறியுள்ளார். அவற்றுள் விராமம் நிற்கும் குணங்களாவன விராமம் தனித்து வராது, குரு, ப்லுதத்தின் மேல் வராது, லகு, துரிதத்தின் மேல் வரும். காகபாதம் நிற்கும் குணங்களாவன காகபாதம் தனித்தும், முதலிலும், நடுவிலும் வராது. குருவிற்கு முன்னும், பின்னும் நிற்காது, ப்லுதத்தின் மேல் வராது, தாளத்தின் பிற்பகுதியிலோ அல்லது லகு, துரிதத்தின் பின் வரும். மேலும் துரிதம், லகு, குரு, ப்லுதம் இந்த 4 அங்கங்களும் எல்லா இடத்திலும் ஒன்றோடு ஒன்று இணைந்தும் தனித்தும் தாளவிதிக்குட்பட்டு வரும்.

**கிரியை – அங்குலப் பிரமாணம்:**

ஒவ்வொரு அங்கங்களின் கிரியைப்பற்றியும் வெண்பா மூலம் ஆசிரியர் விளக்கியுள்ளார். மேலும் மாத்திரைகளின் பிறப்பு பற்றியும் இந்த பகுதியில் விவரித்துள்ளார்.

**அஷ்டகண லக்ஷணம்:**

குரு, லகுக்களான 3 அங்கங்கள் கொண்டது கணம் எனப்படும். மொத்தம் 8 கணங்களையும், ப்ரஸ்தாரம் என்ற மார்க்கப்படி அவற்றை ஒன்றன் பின் ஒன்றாக அமைக்கும் முறையையும் இதில் விளக்கியுள்ளார். அஷ்டகணங்களும் அவற்றை அமைக்கும் முறையும் 2 2 2 - **மகணம்**, 1 2 2 - **யகணம்**, 2 1 2 - **ரகணம்**, 1 1 2 - **சகணம்**, 2 2 1 - **தகணம்**, 1 2 1 -

**ஜகணம்**, 2 1 1 - **பகணம்**, 1 1 1 –**நகணம்.** இந்த அஷ்டகணங்களின் நக்ஷத்திரங்களையும் குறிப்பிட்டுள்ளார்.

**தாளங்களின் ஜாதி:**

சதுரச்சிரம்(4), திரியச்சிரம்(3), மிஸ்ஸிரம்(7), கண்டம்(5) என்ற 4 தாள ஜாதிகளுக்கு பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் முதலிய 4 ஜாதிகளை கூறியுள்ளார்.

**தாள ப்ரஸ்தாரம்:**

ப்ரஸ்தாரம் என்பது பலவகை அங்கங்களினால் தாளங்களை பிறப்பித்தல். இதில் சதுர்மேருப்பிறப்பு, சண்மேருப்பிறப்பு என்ற 2 வகைகளுண்டு. சதுர்மேருப்பிறப்பு என்பது துரிதம், லகு, குரு, ப்லுதம் இந்நான்கு அங்கங்களைக் கொண்டு பல வகையான தாளங்களை அமைக்கும் முறை. சண்மேருப்பிறப்பு என்பது இந்நான்கு அங்கங்களுடன் அனுதுரிதம், காகபாதம் இந்த 6 அங்கங்களைக் கொண்டு ப்ரஸ்தாரம் செய்யும் முறை.

**லயம்:**

லயம் என்பது தாளத்தின் வேகத்தை, காலப்ரமாணத்தை நிலைநிறுத்துவதாகும். 3 வகையான லயங்களை ஆசிரியர் கூறியுள்ளார். அவை, துரிதலயம் – ஒட்ட நடை, மத்தியலயம் – முடுகு நடை, விளம்பிதலயம் – மெத்தின நடை.

**யதி :**

லயத்தின் நடைகளை பல வகையாகத் தொகுக்கும் முறையே யதி என்கிறார் ஆசிரியர். 3 வகையான யதிகளை கூறியுள்ளார். அவை சமை, சுரோதோவகை (ஆற்றொழுக்கம்), கோப்புச்சை எனப்படும்.

**மார்க்கம் :**

தாள அங்கங்களுக்குரிய மாத்திரைகளின் ஏற்றம், குறைவு பேதங்கள் மார்க்கம் எனப்படும். மார்க்க பேதம் 6 வகைப்படும். மார்க்கத்தின் வகைகளும் அவற்றின் மாத்திரை அளவும் 1. **தட்சிணம்** – 8 மாத்திரை, 2. **வார்த்திகம்** – 4 மாத்திரை, 3. **சித்திரம்** – 2 மாத்திரை, 4. **சித்திரதரம்** – 1 மாத்திரை, 5. **சித்தரதமம்** – ½ மாத்திரை, 6. **அதிசித்திரம்** – ¼ மாத்திரை.

**ஏக மாத்திரை லக்ஷண விதி :**

இதில் மார்க்க தாளத்திலும், தேசி தாளத்திலும் லகுவின் அக்ஷரகாலம் பற்றி கூறியுள்ளார். மார்க்க தாளத்தில் லகு **5** அக்ஷரமும், தேசிதாளத்தில் லகு **4** அக்ஷரமும் கொண்டுள்ளது என்கிறார்.

ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

**கிரகம் :**

தாளத்தில் பாட்டை துவங்கும் இடத்தை குறிப்பது கிரகமாகும். தாளமும் பாட்டும் ஒன்றாய் துவங்குவது **சமம்**, தாளத்திற்கு முன் பாட்டை தொடங்குவது **அதீதம்**, தாளத்திற்கு பின் பாட்டை தொடங்குவது **அனாகதம்** ஆகும். இவற்றில் சமம் – மத்திய லயத்திற்கும், அதீதம் – துரிதலயத்திற்கும், அனாகதம் – விளம்பித லயத்திற்கும் பொருந்தும் என்கிறார்.

**கஞ்ச காம்ஸ்ய தாள லக்ஷணம் :**

கஞ்ச காம்ஸ்ய என்கின்ற தாளம் ஜாலர் சுத்தம், சாளகம், சங்கீர்ணம் என்று 3 வகைப்படும், இந்த 3 வகைத் தாளங்களின் கனம், வாயகலம், குமிழ், துவாரம், தெய்வம் ஆகியவைப்பற்றியும் விளக்கியுள்ளார்.

**மணிகட்டு விரலுக்குரிய அதிதேவதைகள் :**

மணிகட்டும் விரலுக்கும் அதிபதியான தேவதைகளைக் கூறியுள்ளார். அவை மணிகட்டிற்குரிய தெய்வம் – **பிரம்மா**, அங்குஷ்ட (கட்டை விரல்) – **விஷ்ணு**, தர்ச்சனி (ஆள்காட்டி விரல்) – **ஈஸ்வரன்**, மத்திமை (நடு விரல்) – **முருகன்**, அனாமிகை (மோதிர விரல்) - **அக்னி,** கனிஷ்டிகை (சுண்டு விரல்) – **மன்மதன்.**

**ஆவாபாதிக்கிரியை :**

இது தாளத்தை எப்படி போட வேண்டும் என்ற செய்கை முறை கிரியையை கூறியுள்ளார். இது 7 வகைப்படும்.

**108 தாளங்களின் வடிவமைப்பு:**

இவர் இந்நூலில் 108 தாளங்களைப் பற்றியும், ஒவ்வொன்றிற்கும் இரண்டடி செய்யுள்களும், அவற்றின் அங்கம் ஆகியவைப் பற்றியும் விளக்கியுள்ளார். அவற்றுள் பிரபலமாக உள்ள தாளங்களைப் பற்றியும், தனித்து விளங்கக்கூடிய தாளங்களில் சிலவற்றை மட்டும் உதாரணமாக காணலாம்.

**சிம்ஹநந்தனம் (சிங்கநந்தனம்) :**

108 தாளங்களில் 37-வது தாளம். 108 தாளங்களில் மிகப்பெரிய தாளமும் கூட. இந்த தாளத்தின் அங்கமானது குரு, குரு, லகு, ப்லுதம், லகு, குரு, துரிதம், துரிதம், குரு, குரு, லகு, ப்லுதம், லகு, ப்லுதம், குரு, லகு, லகு, காகபாதம் மொத்த 128 அக்ஷரம் கொண்டது. 108 தாளத்தில் இந்த தாளத்தில் மட்டும் காகபாதம் என்ற அங்கம் வருகிறது. தற்காலத்திலும் இந்த தாளத்தில்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

சிம்மநந்தன சித்திர நடனம் ஆடுவது, தில்லானா பாடுவது, பல்லவி பாடுவது ஆகியவற்றை முறையாகக் கொண்டு வந்துள்ளனர்.

**ஏக தாளம் :**

108 தாளத்தில் மிகச்சிறிய தாளம் 73-வது தாளம்.

"**ஏக தாளமெழுபத்து மூன்றென வகை பெற சுழியது வருமென்றனரே**".

இது ஒரே ஒரு அங்கத்தை மட்டும் கொண்டதால் ஏக தாளம் என்று பெயர் வந்தது. ஒரே ஒரு துரிதம் (0) மட்டுமே இதன் அங்கமாகும் 2 அக்ஷரம் கொண்டது. இதே போல் **"ஆதி தாளம்"** 108 தாளங்களில் 6-வது தாளமான இது ஒரே ஒரு லகுவை மட்டும் அங்கமாக கொண்டுள்ளது. அங்கம்(I) மொத்தம் 4 அக்ஷரம் கொண்டது. இவ்வாறு **"உற்கட்டிதம்"** என்ற 5-வது தாளம் 3 குருவை (S S S) மட்டும் அங்கமாக கொண்டுள்ளது. மொத்தம் 24 அக்ஷரம். 95-வது தாளமான **"ஷட்தாளம்"** (0 0 0 0 0 0) துரிதத்தை மட்டும் அங்கமாக கொண்டுள்ளது மொத்தம் 12 அக்ஷரம்.

மேலும் 108 தாளங்களில் லலித தாளம், லக்ஷ்மீசம், சரபலீலை, கஜலீலை ஆகியவை மிகவும் பிரபலமாக உபயோகிக்கப்படும் தாளமாக உள்ளது.

இவ்வாறு தாளத்தைப்பற்றி விரிவாக கூறும் ஒரு இலக்கண நூலாகவும், தாளத்தைப்பற்றிய ஓர் அரிய நூலாகவும் தாள சமுத்திரம் விளங்குகிறது.

**துணைநூற்பட்டியல்:**

1. **"தாள சமுத்திரம்" –** திரு. வாசுதேவ சாஸ்திரிகள், தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியீடு, 1955.,

2. **"தமிழக இசை மரபில் தாளக்கலை தாளக் கருவூலம்" –** டாக்டர் கே. ஏ, பக்கிரிசாமிபாரதி, முதல் பதிப்பு 2002, வேன்கார்டு அச்சகம், மதுரை.